# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 548 /2009

Deposition of witness for: PW - 10

| | | | |
|---|---|---|---|
| Name | :Mareeswari | Father/Husband Name: | Karuppasamy |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : Inspector |
| Religion | : | Age | : |
| Date | : 04.04.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2022.

முதல் விசாரணை:

நான் தற்போது தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2008ம் வருடம் நான் மேலூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது 21.12.08ம் தேதி 13 மணிக்கு மதுரை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையிலிருந்த ராமசாமி என்ற கண்ணன் என்பவரை விசாரித்து புகார் மனு பெற்று அதன்பேரில் நிலைய குற்ற எண். 712-08 இதச பிரிவுகள் 147, 148, 341, 342, 324, 323, 506(2) ஆக வழக்கு வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும். புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கயின் அசலையும், கனம் மேலூர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே முதல் சம்பவ இடமான கொட்டகுடியிலுள்ள தென்னந்தோப்பிற்கு சென்று சாட்சிகள் நல்லதம்பி மற்றும் முடிமன்னன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்தேன். வரைபடம் அ.சா.ஆ.8 ஆகும். அன்றையதினமே மற்றொரு சம்பவ இடமான வாதியின் வீட்டு முன்பாக சாட்சிகள் பெரியகருப்பன் மற்றும் பூவராகவன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.9, வரைபடம் அ.சா.ஆ.10 ஆகும். பின்னர் சம்பவ சாட்சிகளான ராமசாமி என்ற கண்ணன், ஆதி, ராஜேந்திரன்,

ரவி, பாண்டியன், சீதை, பாக்கியம், நல்லதம்பி, முடிமன்னன், பெரியகருப்பன் மற்றும் பூவராகவன் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 22.12.08ம் தேதி காலை 10.30 மணிக்கு கொட்டகுடி பேருந்து நிறுத்தத்தில் வைத்து எதிரி ஆரம்மாள் என்பவரை காரணம்கூறி கைது செய்து தக்க வழிக்காவல்மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 23.01.09ம் தேதி இரவு 02.45 மணியளவில் திருவாதவூர் ஐ.ஓ.பி. வங்கி முன்பாக சந்தேகத்தின்பேரில் எதிரிகள் குருமூர்த்தி, ராஜா, ரவி, சிவலிங்கம் ஆகியோர்களை கைது செய்து நிலையம் கொண்டு வந்து விசாரித்து அவர்கள்மீது குவிமுச பிரிவு 110ன்கீழ் வழக்கு பதிவு செய்து விசாரித்தபோது மேற்படி எதிரிகள் இந்த வழக்கில் சம்மந்தம் உடையவர்கள் என்று தெரியவந்ததால் பின்னர் அவர்களிடம் காரணம்கூறி 11.30 மணிக்கு கைது செய்து தக்க வழிக்காவல்மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். மற்ற எதிரிகளான சிவா, கார்த்திக், அமுதா, லட்சுமி ஆகியோர்கள் நீதிமன்ற பிணையில் சென்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. முரளி பால்கண்ணன் என்பவரை விசாரித்து சான்றுகள் பெற்று வாக்கு மூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 147, 148, 341, 342, 324, 323, 506(2)-லிருந்து 147, 148, 341, 342, 326, 323, 506(2) ஆக மாறுதல் செய்து 15.03.09ம் தேதி அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆகும். இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள்மீது அன்றையதினமே குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை:

இந்த வழக்கில் புகார்தாரர் ராமசாமி மற்றும் சாட்சிகளான ஆதி, ரவி, பாண்டியம்மாள், சீதை ஆகியோர்கள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் அ.சா.1, 2 மற்றும் 4 மட்டும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள். அ.சா.3 ராமசாமியின் மைத்துனர் என்றால் சரிதான். அ.சா.5 பாக்கியம் அ.சா.1ன் தம்பி மனைவி என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று அ.சா.1 காலை 5.45 மணிக்கு எதற்காக வயலுக்கு சென்றார் என்று நான் விசாரித்து தெரிந்துகோண்டேனா என்றால் வேலைக்கு சென்றதாக சொன்னார். அ.சா.1 எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி சென்றதாக என் விசாரணையில் சொன்னாரா என்றால் எந்த திசை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. எதிரிகள் எந்த பக்கம் இருந்து வந்தார்கள் என்ற விவரத்தையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளை பார்த்தவுடன் அ.சா.1 தப்பிக்கவோ, வேறு ஆட்களை துணைக்கு அழைத்ததாகவோ என் விசாரணையில் சொன்னாரா என்றால் இல்லை. அ.சா.2ம் மேற்படி வார்த்தைகளை என்னுடைய

விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது ஒரு போக்கு வண்டி வந்ததாக அ.சா.1 சொல்லியுள்ளார் அந்த வண்டி என்ன வண்டி என்றால் ஆட்டோ, அந்த ஆட்டோ யாருடையது என்று சொன்னாரா என்றால் பதட்டத்தில் சொல்லவில்லை. முதல் சம்பவ இடத்தில் அ.சா.1 எவ்வளவு நேரம் இருந்ததாக என் விசாரணையில் சொன்னாரா என்றால் சம்பவம் நடந்தவுடன் போக்கு வண்டியில் சென்றுவிட்டதாக சொன்னார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து எதிரிகள் ஓடியதாக அ.சா.1 சொல்லியள்ளார், எந்த திசையை நோக்கி என்று குறிபபிட்டு சொல்லியுள்ளாரா என்றால இல்லை. அ.சா.1ன் வீட்டின் அருகில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் நினைவில் இல்லை. அ.சா.1-ன் வீட்டருகே காளியம்மாள் விஜயகுமார் ஆகியோர்கள் வீடு உள்ளதாக வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது, அவர்கள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின்போது அ.சா.2 எந்த வகுப்பு படித்துக்கொண்டிருந்தார் என்றால் 12ம் வகுப்பு படித்துக்கொண்டிருப்பதாக சொன்னார். எந்த பள்ளியில் படித்துக்கொண்டிருந்தார் என்று கேட்டேனா என்றால் இல்லை.. அ.சா.2 ஆதி யார் சொல்லி அவர் வீட்டிற்கு வந்ததாக என்னுடைய விசாரணையில் சொன்னார் என்றால் ஊரில் இருப்பவர்கள் அவரது தந்தையை அடித்ததை சொன்னவுடன் வந்ததாக சொன்னார். அந்த ஊரில் உள்ளவர்கள் யார் என்று என்னுடைய விசாரணையில் குறிப்பிட்டு சொன்னாரா என்றால் இல்லை. அ.சா.2 அவரது வீட்டிற்கு வரும்போது எத்தனைபேர்கள் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை, ஆனால் அவரது அம்மா அப்பா எதிரிகள் இருந்ததை சொல்லியுள்ளார். அ.சா.2 வீட்டிற்கு போகும்போது அவரது அப்பா அ.சா.1 ஆட்டோவில் இருந்தாரா, வீட்டில் இருந்தாரா என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் தன் தந்தையை அடித்துக்கொண்டிருந்ததாக சொன்னார். அ.சா.2 பள்ளிக்கு சென்றதாக சொல்லும் நாள் சனிக்கிழமை என்றால் சரிதான். அ.சா.1க்கும் 2க்கும் நான் பணியிலிருந்த காலகட்டத்தில எங்கள் காவல் நிலையம் மற்றும் வேறு காவல் நிலையங்களில் பல்வேறு வழக்குகள் அவர்கள்மீது இருந்தது என்றால் சரிதான். குற்ற எண்.368-08 மேலூர் காவல்நிலையத்தில் நான் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது 1-வது எதிரி கொடுத்த புகாரில் அ.சா.1, 2 மற்றும் அவரது குடும்பத்தினர்மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் அதுபற்றி நினைவல் இல்லை. அ.சா.1 மற்றும் 2 எந்த வாகனத்தில் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார்கள் என்றால் வேனில். அந்த வேனில் யார் உடன் சென்றார்கள் என்றால் காயம்பட்ட நபாகள், அ.சா.1-ன் மனைவி மற்றும் ஒரு உறவினர். அ.சா.1 உடன் வழக்கறிஞர் ராஜேந்திரபிரசாத் என்பவரும் உடன் வந்ததாக என் விசாரணையில் அ.சா.1 குறிப்பிட்டு

சொன்னாரா என்றால் இல்லை. அ.சா.1யிடம் வாக்குமூலம் பெறும்போது யார் யார் இரந்தார்கள் என்றால் அவரது மனைவி. அ.சா.2யிடம் வாக்குமூலம் வாங்கும்போது யார் உடனிருந்தார்கள் என்றால் அடுத்த அடுத்த படுக்கையலி இருவரும் இருந்தார்கள். புகாரை யார் எழுதியது என்றால் அ.சா.1. அவர் சிகிச்சையிலிருந்ததால் என்னிடம் எழுதுமூலமாக புகார் கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் 2 இருவரும் அரசு மருத்துவனியல் சிகிச்சைக்கு சேர்ந்த போது தன்னை தெரிந்த 7 நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளனர் என்றால் சரிதான். மேல் சிகிச்சை அளித்த மருத்துவரை சாட்சியாக சேர்க்கமாட்டோம் என்றால் சேர்க்கமாட்டோம். மேல் சிகிச்சை அளித்த மருத்துவரிடம் இருந்து நான் காயச்சான்றிதழ் எக்ஸ்ரே வாங்கவில்லை என்றால் மருத்துவர் கொடுக்கும் சான்றின் அடிப்படையில்தான் சான்றுமட்டும் பெற்றோம் எக்ஸ்ரே வாங்கவில்லை. எதிரிகள் பயன்படுத்திய சிவப்புநிற காரை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் கத்தி மற்றும் அருவாளை இந்த வழக்கில் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரிகளால் குத்தப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 மற்றும் 2ன் ஆடைகளை இந்த வழக்கில் கைப்பற்றப்படவில்ல என்றால் சரிதான். உண்மையாக சம்பவம் நடந்திருந்ததல் மேற்படி வழக்கு சொத்துக்களை இந்த வழக்கில் கைப்பற்றியிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிகள் 2 மற்றும் 8 ஆகியோர்கள் மேலூர் வசிக்கும் விவரத்தை நான் தெரிந்துகொண்டேனா என்றல் தெரிந்துகோண்டேன். ஆனால் அவர்களின் சொந்த ஊர் கொட்டகுடி, நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 22.12.08ம் தேதி எதிரி ஆரம்மாளை சொன்ன நேரத்தில் இடத்தில் வைத்து கைது செய்வயில்லை என்றால் சரியல்ல. 23.01.09ம் தேதி எதிரிகள் குருமூர்த்தி, ராஜா, ரவி, சிவலிங்கம் ஆகியோர்களை சொன்ன நேரத்தில், இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. முக்கியஸ்தர்களின் அழுத்தத்தினால்தான் இந்த வழக்கினை நான் பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கில் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், பொய்யான புகாரை பெற்ற காவல் நிலையத்தில் வைத்து வழக்காவணஙகள் அனைத்தும் பின்னிட்டு தயார் செய்தேன் என்றால் சரியல்ல. 1-வது எதிரி புகார்தார் மற்றும் அவரது குடும்பத்தின்மீது கொடுத்திருந்த புகாரினால் எதிரிகளை பழிவாங்கவேண்டும் என்று இந்த பொய் புகார் பெறப்பட்டு அதன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.